முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA3 பரீட்சை – 2016 யூலை

# (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2016-07-17
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 09

- **அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  - (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*
  - (4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  - (5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*
  - (6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு வினா வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***வினா வினைச் சொற்களின்*** *நிரலில் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*
  - (7) ***சூத்திரங்களைக் கொண்டுள்ள தாள்*** *இணைக்கப்பட்டுள்ளது.*
  - (8) ***கணித அட்டவணைகள்*** *தரப்படும்.*
  - (9) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 01

“தனிப்பட்ட நிதித் திட்டமிடல் (Personal Financial Planning)” என்பது தனிப்பட்ட பொருளாதாரத் திருப்தியினை அடையும் பொருட்டு பணத்தை முகாமை செய்யும் ஒரு செயன்முறையாகும்.

**நீர் செய்ய வேண்டியது,**

(a) ‘‘தனிப்பட்ட பாதீடு (Personal Budget)” எனும் பதத்தினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) தனிப்பட்ட நிதித் திட்டமிடலின் அனுகூலங்கள் இரண்டு (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

வியாபாரக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட அப்ரோ கம்பனியின்** 2016 முதலாம் காலாண்டிற்கான தொகுக்கப்பட்ட காசு எதிர்வுகூறல் (summarized cash forecast) கீழே தரப்பட்டுள்ளன :

| விபரம் | தொகை (ரூ.'000) |
|---|---|
| 2016 சனவரி 01 இல் ஆரம்ப காசு மீதி | 2,000 |
| மொத்தப் பெறுவனவுகள் | 15,000 |
| மொத்தக் கொடுப்பனவுகள் | (20,000) |
| **2016 மார்ச் 31 இல் இறுதிக் காசு மீதி** | **(3,000)** |

கம்பனியானது 2016 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் முடிவில் காசு மிகை (மீதியினை) அடைவதற்கு திட்டமிடுகிறது.

**நீர் செய்ய வேண்டியது,**

(a) 2016 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் காசுப் பற்றாக்குறையினை அடைந்தமைக்கான சாத்தியமான இரண்டு (02) காரணங்களைக் **கூறுக.** (02 புள்ளிகள்)

(b) இரண்டாவது காலாண்டில் காசு மிகையினை அடைவதற்குத் தேவையான தந்திரோபாயங்கள் / முறைகள் மூன்றினை (03) **இனங்காண்க.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட PD கம்பனியானது P** மற்றும் **D** எனும் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. 2016 ஆகஸ்ட் மாதத்திற்கான கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தறியப் பட்டன:

| விபரம் | | பொருள் P | பொருள் D |
|---|---|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை | (ரூ.) | 920 | 725 |
| அலகொன்றிற்கான நேர்பொருள் (ரூ.40 / கி.கிராம்) | (ரூ.) | 80 | 120 |
| அலகொன்றிற்கான நேர் கூலி : | | | |
| திறமையான நேர்கூலி (ரூ.200 /மணித்தியாலம்) | (ரூ.) | 300 | 200 |
| திறமையற்ற நேர்கூலி (ரூ.85 / மணித்தியாலம்) | (ரூ.) | 255 | 170 |
| அலகொன்றிற்கான மாறும் மேந்தலைகள் | (ரூ.) | 90 | 70 |
| அலகொன்றின் நிலையான உற்பத்தி மேந்தலை | (ரூ.) | 75 | 50 |
| மாதாந்தக் கேள்வி | (அலகுகள்) | 150,000 | 120,000 |

கம்பனியானது 2016 ஆகஸ்ட் மாதத்தில் 330,000 மணித்தியால திறமையான நேர்கூலியை மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**நீர் செய்ய வேண்டியது,**

2016 ஆகஸ்ட் மாதத்தில் கம்பனியின் இலாபத்தினை உச்சப்படுத்தும் உத்தமமான உற்பத்திக் கலவையினை (optimal production mix) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

கீழே தரப்பட்டுள்ள மீதிகள் **வரையறுக்கப்பட்ட அல்டோ கம்பனியின்** 2016 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்டன :

| | **2016 மார்ச் 31 (ரூ.)** | **2015 மார்ச் 31 (ரூ.)** |
|---|---|---|
| வட்டி மற்றும் வரிக்குமுன் இலாபம் | 1,468,500 | 1,240,200 |
| வரிக்கு முன் இலாபம் | 1,015,000 | 980,000 |
| வரிக்குப் பிந்திய இலாபம் | 835,000 | 884,000 |
| குறிப்பிடு மூலதனம் | 8,500,000 | 8,500,000 |
| கைக்கொள் இலாபம் | 4,485,000 | 3,650,000 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 1,250,000 | 1,250,000 |
| மொத்த உரிமையாண்மை | 14,235,000 | 13,400,000 |
| நீண்ட காலக் கடன்கள் | 3,565,000 | 2,200,000 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 650,000 | 725,000 |

**நீர் செய்ய வேண்டியது,**

(a) மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி, இரண்டு ஆண்டுகளுக்குமான தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாயினைக் (ROCE) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) செயற்பாட்டு அளவீடாக ROCE யினைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் இரண்டு (02) **கூறுக.**
(02 புள்ளிகள்)
(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட கெனல் குரூப் (தனியார்) கம்பனி (KGPL)** 2015 ஆம் ஆண்டில் நாய்களுக்கான புதிய உணவினை அறிமுகப்படுத்தியதுடன், கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் அந்தப் புதிய உணவு தொடர்புபட்டவையாகும் :

| | |
|---|---|
| வருடாந்த விற்பனை | ரூ. 20 மில்லியன் |
| அலகொன்றின் விற்பனை விலை | ரூ. 400/- |
| அலகொன்றின் மாறும் கிரயம் | ரூ. 250/- |
| ஆண்டிற்கான நிலையான கிரயம் | ரூ. 4 மில்லியன் |

கம்பனி முகாமையானது **KGPL** க்கு அதிக பயனுடையதாக இருக்கும் வகையில் அலகொன்றின் விற்பனை விலையினை ரூ. 380/- க்கு அல்லது ரூ. 360/- க்குக் குறைக்கத் திட்டமிடுகிறது. முகாமையானது அந்த ஒவ்வொரு விலைக்கும், கேள்வி மட்டங்களை அவற்றுடன் தொடர்புபட்ட நிகழ்தகவுகளுடன் கீழ்வருமாறு மதிப்பிட்டுள்ளது :

| **வருடாந்தக் கேள்வி (அலகுகள்)** | **நிகழ்தகவு** | |
|---|---|---|
| | **அலகின் விலை ரூ. 380/-** | **அலகின் விலை ரூ.360/-** |
| 70,000 | 70% | 60% |
| 90,000 | 30% | 40% |

**KGPL** கம்பனி, ஆண்டிற்கு 77,000 அலகுகளுக்கு மேலாக உற்பத்தி செய்தால் அது மேலதிக நிலையான உற்பத்திக் கிரயமாக ரூ. 2 மில்லியனைச் செலவிடவேண்டி ஏற்படும்.

***நீர் செய்ய வேண்டியது,***

(a) நடப்பு இலாபத்தையும், ஒவ்வொரு விலை மற்றும் கேள்வி மட்டங்களில் மதிப்பிடப்பட்ட இலாபங் களையும் காட்டும் அட்டவணையொன்றினைத் **தயாரிக்குக**. (08 புள்ளிகள்)

(b) கம்பனிக்குப் பொருத்தமான விலை மட்டத்தினை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ரோஸ் கம்பனியின்** 2016 யூன் மாதத்திற்கான பாதிடப்பட்ட மற்றும் உண்மைப் பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன. கம்பனி எல்லைக் கிரயமிடல் முறைமையினை (marginal costing system) தொழிற்படுத்துகின்றது :

| | **பாதிடப்பட்ட (ரூ.'000)** | **உண்மையான (ரூ.'000)** |
|---|---|---|
| விற்பனைகள் | 425 | 416 |
| **<u>கிரயங்கள்</u> :** | | |
| நேர் பொருட்கள் | 150 | 160 |
| நேர் கூலி | 75 | 80 |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் | 25 | 18 |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் | 30 | 25 |
| நிருவாகச் செலவுகள் | 50 | 55 |
| விநியோகச் செலவுகள் | 45 | 60 |
| **மொத்தக் கிரயம்** | **375** | **398** |
| **இலாபம்** | **50** | **18** |

கீழேயுள்ள மேலதிக தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) கம்பனி எதுவிதமான தொக்குகளையும் பேணுவதில்லை. மாதாந்த முழு உற்பத்தியும் அதே மாதத்தில் விற்பனை செய்யப்படும்.

(2) மாதத்திற்கான பாதிடப்பட்ட மற்றும் உண்மையான விற்பனை அலகுகள் முறையே 20,000 அலகுகளும் 18,000 அலகுகளுமாகும்.

(3) நிருவாகச் செலவுகளும் விநியோகச் செலவுகளும் அந்தக் காலத்திற்கான நிலையான கிரயங்களாகக் கொள்ளப்படும்.

***நீர் செய்ய வேண்டியது,***

(a) நெகிழ்ச்சிப் பாதீட்டின் (flexible budget) அடிப்படையில் எல்லைக் கிரயமிடல் படிவமைப்பைப் பயன்படுத்தி 2016 யூன் மாதத்திற்கான தொழிற்பாட்டுக் கூற்றினை (Operating statement) (பாதீட்டுக் கட்டுப்பாட்டுக் கூற்று) **தயாரிக்குக**. (08 புள்ளிகள்)

(b) பாதீட்டுக் கட்டுப்பாட்டின் (budgetary control) இரண்டு (02) வரையறைகளைக் **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**அசோக் PLC (ACL)** ஆனது 100% உரிமையாண்மையால் நிதியளிப்புச் செய்யப்பட்டதும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்தப்பட்டதுமான கம்பனியாகும். கம்பனியின் முகாமை ரூ.200 மில்லியன் ஆரம்ப மூலதன வெளிப்பாய்வினைக் கொண்ட செயற்றிட்டமொன்றில் முதலீடு செய்ய எண்ணுகிறது. **ACL** போதுமான நிதியைக் கொண்டிராத காரணத்தினால் முகாமையானது இந்தச் செயற்றிட்டத்திற்கு ஆண்டிற்கு 15% நிலையான வட்டியினைக் கொண்ட 5 வருட வங்கிக் கடன் மூலம் நிதியளிப்புச் செய்ய எண்ணுகின்றது. 2016 யூன் 30 ஆந் திகதியில் **ACL** இன் பங்குதாரர்கள் நிதியம் (shareholders' fund) கீழ்வருமாறு :

| **விபரம்** | **தொகை (ரூ. மில்லியன்)** |
|---|---:|
| குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்) | 500 |
| கைக்கொள் இலாபம் | 100 |
| **பங்குதாரர் நிதியம்** | **600** |

உடன் முடிவடைந்த ஆண்டிற்கு **ACL** பங்கொன்றிற்கு ரூ. 25/- வீதம் பங்கிலாபம் செலுத்தியது. பங்கிலாபம் ஆண்டிற்கு 15% இனால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. **ACL** இன் சாதாரண பங்குகளின் நடப்புச் சந்தை விலை (trading price) ரூ. 900/- ஆகும்.

வரியீட்டினைக் கணக்கிற் கொள்ள வேண்டியதில்லை.

***நீர் செய்ய வேண்டியது,***

(a) **ACL கம்பனி** வங்கிக் கடனைப் பயன்படுத்தி செயற்றிட்டத்திற்கு நிதியளிப்புச் செய்யத் தீர்மானித்தால், கம்பனியின் நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயத்தினை (WACC) **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(b) வங்கிக் கடனைப் பயன்படுத்தி இந்தச் செயற்றிட்டத்திற்கு நிதியளிப்புச் செய்வதன் அனுகூலங்கள் இரண்டினை (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(c) நீண்டகால நிதியளிப்பு மூலம் ஒன்றினைத் தெரிவுசெய்யும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய காரணிகள் மூன்றினை (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

இந்தப் பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

(A) முன்னணி உற்பத்திக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட DG கம்பனியின்** முகாமையானது அதன் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு தற்போது உள்ள பழைய எந்திரத்திற்குப் பதிலாக புதிய எந்திரமொன்றினைக் கொள்வனவு செய்வதற்கான முன்மொழிவினை மதிப்பாய்வு செய்கின்றது.

கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) புதிய எந்திரத்தின் கிரயம் ரூ. 100 மில்லியன் உடனடியாக செலுத்தப்பட வேண்டும். புதிய எந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகவும் ஐந்தாவது ஆண்டு முடிவில் அதன் ஒடிவுப் பெறுமதி ரூ. 14 மில்லியனாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

(2) புதிய எந்திரம் கொள்வனவு செய்யப்படும் பட்சத்தில் பழைய எந்திரத்தினை உடனடியாக ரூ. 6 மில்லியனுக்கு விற்பனை செய்ய முடியும். தற்போதைய பழைய எந்திரம் முற்றாகத் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

(3) புதிய எந்திரத்தின் கொள்வனவினால் பொருட்களின் தரம் அதிகரிப்பதுடன் அதன் காரணமாக பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த 5 ஆண்டுகளுக்கு கம்பனியின் உற்பத்திப் பொருட்களுக்கான எதிர்வுகூறப்பட்ட அதிகரித்த கேள்வி கீழ்வருமாறு :

| ஆண்டு | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கேள்வி (அலகுகள்) | 30,000 | 20,000 | 25,000 | 35,000 | 40,000 |

(4) ஏனைய எதிர்வுகூறப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு :

| விபரம் | ரூ. |
|---|---|
| அலகொன்றின் விற்பனை விலை | 3,000 |
| அலகொன்றின் மாறும் கிரயம் | 1,500 |
| வருடாந்த நிலையான கிரயம் (தேய்மானம் உட்பட) | 40,000,000 |

(5) **வரையறுக்கப்பட்ட DG கம்பனியின்** மூலதனக் கிரயம் ஆண்டிற்கு 20 %.

(6) வரியீட்டினைத் தவிர்க்கவும்.

**நீர் செய்ய வேண்டியது,**

(a) 5 ஆண்டுகளுக்கு புதிய எந்திரம் தொடர்புபட்ட சகல காசுப் பாய்வுகளையும் **ஏற்பிசைவு செய்க.** (09 புள்ளிகள்)

(b) மேற்படி காசுப் பாய்வுகளின் அடிப்படையில் கீழ்வருவனவற்றினைக் **கணிக்குக.**

(i) நிகர இற்றைப் பெறுமதி (NPV).

(ii) அக விளைவு வீதம் (IRR). (08 புள்ளிகள்)

(c) புதிய எந்திரத்தில் முதலீடு செய்வது **DG கம்பனிக்கு** நிதிசார்பாக இலாபகரமானதா என **மதிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட சுவிச் கம்பனியானது,** அது உற்பத்தி செய்யும் வேறுபட்ட பொருளான **C3** யின் 125 அலகுகளுக்கு அலகொன்று ரூ. 900/- விலையில் கொள்வனவு செய்வதற்கான விசேட கட்டளையொன்றினை வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெற்றுள்ளது. **C3** யின் ஒவ்வொரு அலகும் கீழ்வருவனவற்றைத் தேவைப்படுத்தும் :

- **நேர் பொருள்** – 1 கி.கிராம் நேர் பொருட்கள் அலகொன்று ரூ. 660/- விலையில் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட வேண்டும்.
- **நேர் கூலி** – வழமையாக மணித்தியாலத்திற்கு ரூ. 500/- வீதம் செலுத்தப்படும் 0.5 நேர் கூலி மணித்தியாலம். தற்போது கூலி உத்தரவாதப்படுத்தப்பட்ட 40 சோம்பல் கூலி மணித்தியாலங்கள் (idle labour hours) உள்ளன. நேர் கூலி மணித்தியாலங்களில் எந்தவொரு பற்றாக்குறையும் மேலதிக நேர வேலை செய்வதன் மூலம் ஈடு செய்யப்படும். மேலதிக நேர வேலைக்கு வழமையாக மணித்தியால கூலி வீதத்தின் 1.5 மடங்கு செலுத்தப்படும்.
- **மாறும் மேந்தலைகள்** - நேர் கூலி மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ. 60/- வீதம் மாறும் மேந்தலைகள் கணிக்கப்படும்.
- **நிலையான மேந்தலைகள்** - இந்தக் கட்டளைக்கான நிலையான மேந்தலை நேர் கூலி மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ. 55/- வீதம் உறிஞ்சப்படும்.

**வரையறுக்கப்பட்ட சுவிச் கம்பனி** இந்தக் கட்டளையை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதனை காரணங்களுடனும் சான்றாக அமையும் கணிப்பீடுகளுடனும் **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **வரையறுக்கப்பட்ட மெடிமற் (தனியார்) கம்பனி (MPL)** அதன் பொறித்தொகுதி ஒன்றில் **பொருள் X** இனை உற்பத்தி செய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்கின்றது.

**MPL கம்பனி** நியம உறிஞ்சற் கிரயமிடல் முறைமையினை (standard absorption costing system) தொழிற்படுத்துவதுடன், மாதத்திற்கு பாதிடப்பட்ட உற்பத்தியான 2,000 அலகுகளின் அடிப்படையில் அமைந்த நேர் கூலி மணித்தியால அடிப்படையில் மேந்தலைகளை உறிஞ்சுகின்றன. மாதத்திற்காக பாதீடு செய்யப்பட்ட விற்பனை அலகொன்று ரூ. 12,000/- வீதம் 2,000 அலகுகளாகும்.

**பொருள் X** இன் ஒரு அலகுக்கான நியமக் கிரய அட்டை :

| | **ரூ.** |
|---|---|
| நேர் பொருட்கள் – **A** (கி.கிராம் ரூ. 400/- வீதம் 10 கி.கிராம் | 4,000 |
| நேர் கூலி (மணித்தியாலத்திற்கு ரூ. 150/- வீதம் 4 மணித்தியாலம்) | 600 |
| மாறும் மேந்தலை (மணித்தியாலத்திற்கு ரூ. 100/- வீதம் 4 மணித்தியாலம்) | 400 |
| நிலையான உற்பத்தி மேந்தலை (மணித்தியாலத்திற்கு ரூ. 200/- வீதம் 4 மணித்தியாலம்) | 800 |
| **மொத்தக் கிரயம்** | **5,800** |

2016 யூன் மாதத்திற்கு பதிவு செய்யப்பட்ட உண்மையான பெறுபேறுகள் :

| | |
|---|---|
| உற்பத்தி செய்து விற்பனை செய்தது | 1,800 அலகுகள் |
| அலகொன்றின் விற்பனை வலை | ரூ. 13,000/- |
| நேர் பொருள் – **A** | ரூ.500 / கி.கிராம் வீதம் 17,800 கி.கிராம் |
| நேர் கூலி | ரூ.200 / மணித். வீதம் 7,100 மணித்தியாலம் |
| மாறும் மேந்தலைகள் | ரூ. 960,000/- |
| உறிஞ்சப்பட்ட நிலையான உற்பத்தி மேந்தலை | ரூ. 1,600,000/- |

மாத ஆரம்பத்திலோ அல்லது இறுதியிலோ **MPL கம்பனி** தொக்குகளைக் கொண்டிருக்கவில்லை.

***நீர் செய்ய வேண்டியது,***

(a) 2016 யூன் மாதத்திற்கான உண்மை இலாபத்தினை **மதிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) 2016 யூன் மாதத்திற்கு கீழ்வரும் முரண்களைக் **கணிக்குக.**

(i) விற்பனை விலை முரண் (Sales price variance)

(ii) விற்பனைக் கனவளவு முரண் (sales volume variance)

(iii) நேர் பொருள் விலை முரண்

(iv) நேர் பொருள் பாவனை முரண்

(v) நேர் கூலி விகித முரண்

(vi) நேர் கூலி வினைத்திறன் முரண்

(vii) மாறும் மேந்தலை செலவின முரண்

(viii) மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் (16 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட டியூரோபிளாஸ்ட் (தனியார்) கம்பனி** அதன் காலியில் அமைந்துள்ள தொழிற் சாலையில் வேறுபட்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றது. கீழ்வரும் தகவல்கள் அடுத்த ஆண்டிற்காக எதிர்வு கூறப்பட்டுள்ளன.

| **விபரம்** | | **பொருள் A** | **பொருள் B** | **பொருள் C** |
|---|---|---|---|---|
| விற்பனை | (ரூ. மில்லியன்) | 25 | 30 | 10 |
| மாறும் கிரயம் | (ரூ. மில்லியன்) | (10) | (15) | (3) |
| பங்களிப்பு | (ரூ. மில்லியன்) | 15 | 15 | 7 |
| ஒதுக்கப்பட்ட மேந்தலை (குறிப்பு 01) | (ரூ. மில்லியன்) | (7.5) | (9) | (9) |
| நிகர இலாபம் | (ரூ. மில்லியன்) | 7.5 | 6 | (2) |
| ஏனைய தகவல்கள் : | | | | |
| விற்பனை செய்யப்படவுள்ள கணியம் | (அலகுகள்) | 200,000 | 200,000 | 50,000 |
| மொத்தப் பங்களிப்பு / மொத்த விற்பனைப் பெறுமதி (இலாப - கனவளவு வீதம்) | | 60% | 50% | 70% |

**குறிப்பு 01 – விற்பனைக் கிரயம்**

(1) ஒதுக்கப்பட்ட மேந்தலைகள், இலாபக் கணிப்பீட்டிற்காக ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு பொருட்களின் விற்பனையின் 30% ஆக கணிக்கப்பட்ட தலைமை அலுவலக செலவுகளை உள்ளடக்குகின்றது.

(2) பொருள் **C** க்கு ஒதுக்கப்பட்ட மேந்தலைகள் அந்தப் பொருள்சார்ந்த நிலையான உற்பத்திக்கிரயம் ரூபா 6 மில்லியனை உள்ளடக்குகின்றது.

எதிர்வரும் ஆண்டிற்காக பொருள் **C** க்கான எதிர்வு கூறப்பட்ட நிகர இலாபம் மறையானதாக இருப்பதனால், **DPL** இன் முகாமை கீழ்வரும் மாற்று வழிகளை கவனத்திற் கொண்டுள்ளது ;

(i) பொருள் **C** யின் உற்பத்தியினை நிறுத்துதல். அதன் மூலம் பொருள் **C** சார்ந்த நிலையான உற்பத்திக் கிரயமான ரூ. 6 மில்லியனை மீதப்படுத்த முடியும்.

(ii) பொருள் **C** யின் உற்பத்தியினை நிறுத்திவிட்டு, அந்த வளங்களை 140,000 அலகுகள் பொருள் **B** யினை உற்பத்தி செய்யப் பயன்படுத்தல். எனினும், பொருள் **B** யின் இந்த மேலதிகக் கணியத்தை பொருள் **B** யின் வழமையான சந்தை விலையிலும் 10% குறைவான விலைக்கே விற்பனை செய்ய முடியும்.

**நீர் செய்ய வேண்டியது,**

மேலே தரப்பட்டுள்ள மாற்று வழிகளுள் எந்த மாற்றுவழி **DPL** க்கு நிதியடிப்படையில் இலாபகரமானது என **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |

# சூத்திரங்களும் கணித அட்டவணைகளும்

**நிதிக் கணியம் :**

எளிய வட்டி :

$S = X\,(1 + nr)$

கூட்டு வட்டி:

$S = X\,\{1 + r\}^n$

கழிவிடுதல் :

இற்றைப் பெறுமதி = எதிர்காலப் பெறுமதி $\times \frac{1}{(1+r)^n}$

தொடர் பெறுமதி:

தொடர் பெறுமதியின் இற்றைப் பெறுமதி = $\frac{A}{r}$

கணக்கீட்டு வருமான விகிதம்:

ARR = $\frac{\text{முதலீட்டிலிருந்தான சராசரி வருடாந்த இலாபம்}}{\text{சுராசரி முதலீடு}}$ X 100%

ARR = $\frac{\text{மதிப்பிடப்பட்ட சராசரி இலாபங்கள்}}{\text{மதிப்பிடப்பட்ட ஆரம்ப முதலீடு}}$ X 100%

உள்ளக வருவாய் வீதம் (அக விளைவு விகிதம்) –IRR:

$IRR = \frac{[N_1 r_2 - N_2 r_1]}{[N_1 - N_2]}$ X 100%

Or

$$IRR = a\% + \frac{NPV_A}{[NPV_A - NPV_B]}\,(b - a)\%$$

தொக்குக் கட்டுப்பாடு :

சிக்கனக் கட்டளைக் கணியம்:

உடனடி மீளளிப்பு :

$$\sqrt{\frac{2C_0D}{C_n}}$$

படிப்படியான மீளளிப்பு:

$$\sqrt{\frac{2C_0D}{C_n\{1 - D/R\}}}$$